பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 12 புதன்கிழமை 28.08.2024 கதிர் 294

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலையொட்டி வடக்கு கிழக்கில் எந்தப் பரபரப்பும் இல்லைஎன்றாலும்தெற்கில்நடக்கும் கூத்துக்கள் சில சமயங்களில் கடும் நகைச்சுவையாகவும் ☞ 2

### தேர்தலைப் புறக்கணிக்கும்

## முன்னணியின் செயல் தொடர்பில் முறைப்பாடு

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களிப்பதைத் தடுக்கும் வகையில் வடக்கு, கிழக்கில்உள்ளதுண்டறிக்கைகள் விநியோகிக்கப்படுவதாக முறைப்பாடு கிடைத்துள்ளது என்று ஜனநாயக தேர்தல் மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகளுக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார். .

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளிட்டகுழுவினர்துண்டறிக்கைகளை விநியோகித்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யினரே இவ்வாறு தேர்தலைப் புறக்கணிக் கக்கோரும்துண்டறிக்கைகளை விநியோ கித்துவருகின்றனர். வடக்குகிழக்கில்உள்ள முக்கிய நகரங்களில் அவர்கள் இந்தப் பரப்புரையை மேற்கொண்டுள்ளனர். முன்னணியின்நாடாளுமன்றஉறுப்பினர் கஜேந்திரன் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் முன்னணியின் பெயரைமஞ்சுளகுறிப்பிடவில்லை. ☞ 2

### அபிவிருத்தி, வறுமை ஒழிப்புக்கு

# தமிழரை பாதுகாத்த ராணுவம் மீது அபாண்டமான போர்க் குற்றச்சாட்டு

## எமது ஆட்சியில் அவர்களைப் பாதுகாப்போம் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் திட்டவட்டம்

தமிழர்களைப்பாதுகாத்தஇராணுவத்தினர் மீதே போர்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்படுகின்றன.எமது ஆட்சியில் எமது படையினரைப் பாதுகாப்போம் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

குருணாகல் - கல்கமுவ பகுதியில் நேற்று இடம்பெற்ற அவரது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சி என்ற ரீதியில் நாங்கள் நாட்டுக்கு அபிவிருத்தி செய்துள்ளோம்.முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நகரத்தை அபிவிருத்தி செய்தார். நாட்டு மக்கள் அனை வருக்கும் ஒருமித்த பொருளாதார கொள் கையை நாங்கள் செயற்படுத்தினோம்.

இப்போது மகாநாயக்கர்களையும், பௌத்த கலாசாரத்தையும் திட்டமிட்ட வகையில் விமர்சிக்கும் செயற்பாடுகள் ☞ 2

## சட்டவிரோத களை நாசினிகளை தேடி அதிகாரிகள் யாழில் வேட்டை

### விற்றவர்கள் மீது வழக்குகளும் தாக்கல்



யாழ். மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட விவசாயகளைநாசினிகளைவேட்டையாடும் திடீர் நடவடிக்கையில் விவசாய இரசாயன கட்டுப்பாட்டுப்பிரிவினர்தீவிரமாகஈடுபட்டனர்.

சட்டவிரோதமாகஇறக்குமதிசெய்யப்பட்ட விவசாய இரசாயனங்கள் அடங்கிய களை நாசினிகள். பூச்சி நாசினிகள் விற்பனை அதிகர்த்ததை அடுத்தே மாவட்டம் முழுவதும் அதிகாரிகள் இந்த அதிரடி சோதனையில் குதித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளின்போது ஆவரங் கால் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து சுமார் 4 மில்லியன் ரூபாய் பெறும தியான சட்டவிரோத களை நாசினிகள் கைப்பற்றப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்தவர்த்தகநிலை யத்திற்கு சொந்தமான களஞ்சியசாலையிலும் சோதனைநடத்தப்பட்டது. குறிப்பிட்ட வர்த்தக நிலைய உர்மையாளர் மீது அதிகாரிகளால்வழக் குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

சாவகச்சேரிபகுதியில் உள்ளவர்த்தகநிலையம் ஒன்றில் இருந்தும் சட்டவிரோத ☞ 8

### மீன்பிடிதுறைக்குள் குழப்பம்

## அமைச்சு கடமைக்களிலிருந்து விலகிய இராஜாங்க அமைச்சர்

கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த, தனது அமைச்சின் கீழ் இருந்த நான்கு அரச நிறுவனங்களின் பொறுப்புகளில் இருந்து திங்கட்கிழமை விலகினார். தனது பொறுப்பு விலகல் தொடர்பாக அவர் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் அறிவித்துள்ளார்.

இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம், நாரா ☞ 2

## இருவர் கைது

வவுனியா கனகராயன்குளம் சின்னடம்பனில் இடம்பெற்ற கொலை தொடர்பில்சந்தேகத்தின்பேரில்இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுவிஸ் நாட்டில் இருந்து இரண்டு நாட்களுக்கு முன்னரே வருகை தந்த ஒருவரேகொலை செய்யப்பட்டார். அப்பகுதி ஐய்யனார்கோவில்திருவிழாவில்பின்னர் அங்குள்ள வீடொன்றில் சுவிசில் இருந்து வந்தவரும் அவரது உறவினரும் ☞ 8

## அவசியமானால் மட்டுமே கடவுச்சீட்டைப் பெறுங்கள்

### திணைக்களம் அறிவிப்பு

முற்றிலும் அத்தியாவ சியமான காரணங்களுக்காக மட்டுமேகடவுச்சீட்டுக்குவிண் ணப்பிக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மக்களிடம் வலியுறுத்தியுள்ளது.

இக்கோரிக்கையை முன் வைத்து திணைக்களத்தின் கட்டுப்பாட்டு ☞ 8

### தேர்தல் ஆணைக்குழு

## ஹரின், மனுஷ மீது தீவிர கண்காணிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஆளும் தரப்புப் பக்கம் தாவியதற்காக நாடாளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் ஹரின்பெர்னான்டோமற்றும் மனுஷ நாணக்கார ஆகிய இருவரையும்மீதும்தேர்தல் ஆணைக்குழு தீவிரமாகக் கண்காணித்து வருகின்றது.

நாடாளுமன்றப்பதவியை இழந்ததால் அமைச்சுப் பதவிகளையும் இழந்த இவர்கள் இருவரையும் அண்மையில் தனது ஆலோசகர்களாக ☞ 2

## தபால் மூல வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகள் நிறைவு

ஜனாதிபதித்தேர்தலுக்கானதபால் மூல வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள்நிறைவடைந்துள்ளதாகஅரச அச்சகபணிப்பாளர்நாயகம்கங்கானி கல்பானி லியனகே தெரிவித்தார்.

அவை தற்போது தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கப் பட்டுவிட்டன என்றும் அவர் தெரிவித்தார். வாக்குசீட்டுக்கள் அரச அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாணத் திற்கான வாக்குச்சீட்டுக்கள் நேற்றே வந்துவிட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இராதாகிருஸ்ணன், உதயகுமார் எம்.பிக்களும் கட்சி தாவுவார்கள்

### ரணிலுடன் பேசிவிட்டார்கள் என்கிறார் வேலு குமார்

தமிழ் முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் மலையக மக்கள் முன்னணியின்தலைவர்நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணனும் அக்கட்சியின் மற்றொருநாடாளுமன்ற உறுப்பினரான உதயகுமாரும் அடுத்த மாதம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக ரணில் விக்கிரமசிங்க பக்கம் வருவார்கள் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார்.

அண்மையில் முற்போக்குக் கூட்டணியிலிருந்து ஜனாதிபதி பக்கம் தாவியவர் நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார். தொலைக்காட்சியில் நடந்த விவாதம் ஒன்றில் இவரும் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினருமான திகாம்பரமும் கட்சத் தாவல் குறித்துப் பேசப் போய் கைகலப்பில்ஈடுபட்டதும்அண்மையில் பெரும் சர்ச்சையாக வெடித்திருந்தது.

இந்த நிலையில் பம்பலப்பிட்டியில் உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசி ங்கவின் தேர்தல் அலுவலகத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த வேலுகுமார்மேலும்தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக்கொண்டுசெல்லக்கூடிய தலைவர் யார் என்பதை நாட்டு மக்கள் இனங்கண்டுள்ளனர். 2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடந்த இரண்டு வருடங்களில் வீழ்ச்சியடைந்த ☞ 2

## ஐ.நா. ஆணையைப் புதுப்பியுங்கள் மனித உரிமை அமைப்பு கோரிக்கை

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், சர்வதேச்சட்ட மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டுவதற்கும் கண்காணிப்பதற்குமாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவால் உருவாக்கப்பட்ட பொறிமுறைக்கான ஆணையை மீண்டும் ஒரு தடவை நீடிக் கும்படி மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகளிடம் வலியுறுத்தி யுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் செப்டெம் பர் 9 தொடங்கவுள்ளது. அதனையொட்டிஇந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.இலங்கையின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தில் மிகமோசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சமகாலப்போக்குகள் உள்ளடங் கலாக நாட்டின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஆணையர் வோல்கர் டர்க்கினால் கடந்த வாரம் விரிவான அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

அவ்வறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பான தமது நிலைப்பாடு மற்றும் இலங்கை விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்படவேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை என்பவற்றைக் குறிப்பிட்டு அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும்மனிதஉரிமைகள் கண்காணிப்பகம்அறிக்கை ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இருக்கின்றன. அதுவும் கடைசி நேரத்தில் கட்சிதாவியவர்களின் நடவடிக்கைகள் பெரும் கேளிக்கை விருந்தாகவே இருக்கின்றனவாம்.

குறிப்பாக மகிந்த ராஜபக்சக்கள் தரப்பிலிருந்து அண்மையில் ரணில் விக்கிரமசிங்க தரப்புக்குத் தாவியவர்களுக்கு தேர்தல் மேடையில் யாருடைய பெயரை உச்சரிப்பது என்பது பெரும் சிக்கலாக இருக்கிறதாம். ரணிலுக்கு ஆதரவான பரப்புரை மேடையில் ஏறி வழக்கம் போலவே மகிந்த ராஜபக்ச மகத்துமா என்று விளித்து விடுகிறார்களாம்.

இதுவரையில் ரணிலின் பரப்புரை மேடையில் இப்படிப் பல தடவைகள் நடந்துவிட்டனவாம். உரையாற்றிக்கொண்டு செல்லும்போது மகிந்தவின் பெயரே சரளமாக வந்து விழுந்துவிடுகின்றதாம். அதன் பின்னர்தான் சுதாகரித்துக்கொண்டு ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை உச்சரிக்கிறார்களாம். இதன் மூலம் ராஜபக்சக்களுக்கு இலவசப் பரப்புரையை ரணிலே ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள் என்கிறார்கள்.

இந்த வரிசையில் கடைசிச் சம்பவம் நேற்று நடந்திருக்கிறது. ராஜபக்சக்கள் தரப்பிலிருந்து சென்ற பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ரணிலுக்கு ஆதரவான கூட்டத்தில் பேசும்போது இப்படி மகிந்தவின் பெயரை உளறித் தொலைத்துவிட்டு, பின்னர் சுதாகரித்து ரணில் விக்கிரமசிங்க என்று திருத்திக்கொண்டாராம். எல்லாம் தேர்தல் செய்யும் மாயம் அல்லவா!

...............

இது ஜனாதிபதித் தேர்தலில் நடந்த மற்றொ-ரு சிறப்பான சம்பவம்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 39 வேட்பாளர்களில் ஒருவர் திடீரென தனது பாதுகாப்பு அதிகமாக்கப்படவேண்டும் என்று கேட்டுள்ளார்.

அவரது கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்த பொலிஸார் முதலில் அதிர்ந்து பின்னர் சிரிக்கத் தொடங்கிவிட்டனராம். காரணம் தனது மனைவியிடம் இருந்து எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் காரணமாகத்தான் அந்த வேட்பாளர் தனக்கு அதிக பாதுகாப்புத் தேவை என்று கேட்டுள்ளாராம்.

தேர்தல் பணிகளுக்காகத் துணைவியாருடன் பயணம் செய்து வரும் அவர், தனது மனைவியிடம் இருந்து பாதுகாப்பு கேட்டு இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவரது நிலைமையின் அடிப்படையில் அவருக்கு பாதுகாப்பை அதிகரிக்க முடியுமா என்பது தொடர்பில் தாம் மேலும் கலந்துரையாடவேண்டியிருக்கிறது என்று பொலிஸார் அவருக்கு இப்போது அறிவித்துள்ளனர்.

கடைசியில் நிலமை எப்படியெல்லாம் போகிறது பாருங்களேன்.

...........................

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெல்வார்கள் என்பது தொடர்பில் ஒவ்வொரு தரப்பும் நாளுக்கொரு கருத்துக் கணிப்பு வெளியிட்டு வருகின்றன. சஜித், அனுர, ரணில் ஆகியோருக்கு ஆதரவான அமைப்புக்களும் ஊடகங்களும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இத்தகைய கருத்துக் கணிப்புக்களை வெளியிட்டு தமக்கான ஆள்தான் வெற்றி பெறுவார் என்று உரைக்கின்றன.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும வெற்றிபெறப் போவர் தொடர்பாக ஒரு கணித் தர்க்கத்தை வெளியிட்டிருக்கிறார். அவரது கருத்துப்படி,

இம்முறை தேர்தலில் வாக்காளர்க 171 லட்சம் வாக்குகள் தயாராக உள்ளன. அதில் 140 லட்சம் பேர் வாக்களிப்பார்கள் என்று வைத்துக்கொள்ளலாம். அவர்களில் 50 சதவீதமானோரின் ஆதரவைப் பெற்று வெற்றியைச் சுவைக்கவேண்டுமாயின் 70 லட்சம் வாக்குகள் தேவை.

2020 பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க 249,000 வாக்குளைப் பெற்றார். 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவுக்கு வாக்களித்த 69 இலட்சம் பேரில் 40% பேர் இப்போ-து ரணிலுக்கு ஆதரவு என்று வைத்துக்கொண்டால், அந்தக் கணக்கு 27 இலட்சம். ஆகமொத்தத்தில் ரணில் அதிகபட்சம் 30 இலட்சம் வாக்குகள் வரை பெறலாம்.

கடந்த முறை அனுராவுக்கு 418,000 வாக்குகள் கிடைத்தன. அவர் 70 லட்சம் வாக்குகளைப் பெறவேண்டுமாயின் இன்னும் 65 லட்சம் வாக்குகளைப் பெறவேண்டும். அரகலயவுக்குப் பின்னர் மேலும் 7 லட்சம் புதிய வாக்குகளை அவர் கவர்ந்திருக்கிறார் என்று சொல்லப்படுகின்றது. அப்படிப் பார்த்தாலும் அநுர வெற்றி பெறுவதற்கு கிட்டத்தட்ட 60 இலட்சம் புதிய வாக்குகளைப் பெறவேண்டும்.

2019 ஜனாதிபதி தேர்தலில் சஜித் 55 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தார். அந்தத் தேர்தில் கோட்டாபயதான் வெற்றி பெறுவார் என்று முழு நாடும் எதிர்பார்த்திருந்தபோதும் சஜித்தை இவ்வளவு எண்ணிக்கையிலா மக்கள் ஆதரித்தனர். அதில் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்ட 10 சதவீதம் வாக்குகளும் அதற்குள் அடக்கம்.

தமிழ் அரசுக் கட்சி யாருக்கு வாக்களிப்பது என்பதை இன்னமும் இறுதி முடிவாக அறிவிக்காத காரணத்தால் அந்தப் 10 சதவீதம் தமிழ் வாக்குகளையும் கழித்தால்கூட, சஜித்திடம் 45 லட்சம் வாக்குகள் இருக்கின்றன. எனவே வெற்றிக்கான 70 லட்சம் வாக்குகளைப் பெறுவதற்கு சஜித்திற்கு இன்னும் 25 லட்சம் வாக்குகள் இருந்தால் போதும்

எனவே வெற்றிக்கு மிக நெருக்கமான வேட்பாளர் சஜித். பிரேமதாசவே. மற்ற அனைவரும் வெற்றி பெறுவதற்கு 40 லட்சம் வாக்குகளைச் சேகரிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தமிழர்களின் வாக்குகளும் சஜித்திற்குக் கிடைத்தால் அவரது வெற்றி உறுதியாகிவிடும் - என்பது டலஸின் அறிவிப்பு.

அவரது கணிப்பு மெய்யாகிறதா இல்லையா என்பதை செப்டெம்பர் 22 மதியத்திற்குள் அறிந்துகொள்ளலாம்.

எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பலம் வாய்ந்த பெண் பிரமுகர் ஒருவர் திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர் விரைவில் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்த அவருடன் சேருவார் என்றும் தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறின.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை மற்றும் தனியார் ஊடக நிறுவனத்துடனான சர்ச்சையின் அடிப்படையில் அவர் இந்த விரைவான முடிவை எடுத்துள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தமிழுரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. இதனை அலட்சியப்படுத்த முடியாது.

பிறிதொரு தரப்பினர் இராணுவத்தையும் கேலிக்கூத்தாக்கினார்கள். விடுதலை புலிகளிடமிருந்து நாட்டை பாதுகாத்த இராணுவத்தினர் குற்றவாளிகளாக் கப்பட்டார்கள். அவர்களைச் சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

உலக நாடுகளில் தற்போது இடம் பெறும் போரினால் சிவில் பிரஜைகள் கொல்லப்படுகிறார்கள். இதனை பற்றி எந்த நாடும் பேசுவதில்லை. நாங்கள் மனிதாபிமான கண்காணிப்புக்களை முன்னெடுத்தோம். தமிழர்களை பாதுகாத்த இராணுவத்தினர் மீதே போர்க்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எமது ஆளும்தரப்பு இராணுவத்தினரின் கௌரவத்தை பாதுகாப்போம். இராணுவத்தினர் இந்த நாட்டுக்கு செய்த சேவையை நாங்கள் நன்கு அறிவோம். ஆகவே அவர்களுக்கான புதிய நலன்புரித்திட்டங்களை முன்னெடுப்போம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச ஒரு தரப்பினரது தவறான ஆலோசனைகளுக்கமைய விவசாயத்துறையில் முன்னெடுத்த தவறான தீர்மானத்தால் இரண்டு போக விவசாய நடவடிக்கை பாதிக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் விவசாய கொள்கையையே நான் செயற்படுத்துவேன்.

இறக்குமதி செய்து உணவளிக்க முடியும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. தேசிய உற்பத்திகளை சகல வழிகளிலும் மேம்படுத்த விசேட கொள்கை திட்டங்களை செயற்படுத்துவோம் என்றார்.

## முன்னணியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் இவ்வாறான துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன என்று அவர் சுட்டிக்காட்டினார். இது அரசியமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் இறைமையை மீறும் செயலாகும் என அவர் கண்டித்தார், 1981ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் பிரகாரம் இதனைச் செய்யக்கூடாது எனவும் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வாக்களிக்க வேண்டாம் என்று ஒருவருக்கு அழுத்தம் கொடுப்பது பெரும் தவறு. இது குறித்து தேசிய தேர்தல் ஆணையம் ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் ஆதரவாளர்கள் குழுவொன்று மதவாதக் கருத்தை உருவாக்க முயற்சிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இராதாகிருஸ்ணன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பொருளாதாரத்தை ஒரு குறிப்பிட்ட நிலைக்கு கொண்டு வருவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உழைத்தார். அடுத்த ஐந்தாண்டுகளில் அதை மேலும் உறுதியாக்கும் பணியை அவரால் மாத்திரமே செய்ய முடியும். எனவேதான் நாம் வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் வெளியே வந்து அவரது வெற்றிக்கு முழு ஆதரவை வழங்குகிறோம்.

நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக அநுரவும், சஜித்தும் குறிப்பிடுகின்றனர். அதனை எவ்வாறு செய்வார்கள் என்பதை தெளிவுபடுத்துமாறு அவர்களை விவாதத்துக்கு அழைக்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் விசித்திரக் கதைகளைக் கொண்டுள்ளது. அதில் நடைமுறை சாத்தியமான எந்த விடயங்கள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்படவில்லை. நாட்டு மக்களை மீண்டும் ஒருமுறை வரிசை யுகத்திற்கு உள்வாங்கும் வகையில் செயற்படவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

2021ஆம் ஆண்டின் பின்னர் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை தற்போது 1700 ரூபாவாக அதிகரித்துள்ளார். செப்டெம்பர் 10ஆம் திகதி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா நாளாந்த சம்பளம் கிடைக்கப்பெறும்.

மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மேலும் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் அதாவது மலையக மக்கள் முன்னணியின் இராதாகிருஸ்னண் மற்றும் உதயகுமார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். செப்டெம்பர் 10ஆம் திகதி பெருந்தோட்ட தொழிலாளர்களின் கைகளில் 1700 ரூபா சம்பளம் கிடைத்தவுடன், அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்காக வெளியேறுவார்கள் - என்றார்.

## அமைச்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனம், சீனோர் நிறுவனம் மற்றும் வட கடல் நிறுவனம் என்பன இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவின் கட்டுப்பாட்டில் இருந்தன. அவற்றின் பொறுப்பிலிருந்தே தாம் விலகுகிறார் என்று இராஜாங்க அமைச்சர் அறிவித்துள்ளார்.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நியமனம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையும், அது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கையை நடைமுறைப்படுத்தாததும் அந்த நிறுவனங்களின் பொறுப்பை இராஜாங்க அமைச்சர் துறப்பதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று போலி பிறப்புச் சான்றிதழ்கள் சமர்பிக்கப்பட்டமை மற்றும் நிர்வாகச் சீர்கேடு காரணமாக கடற்றொழில் கூட்டுத் தாபனத்தின் தலைவர் கடற்றொழில் அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். கடற்றொழில் அமைச்சின் செயலாளர் நிஷாந்த விக்கிரமசிங்கவும் இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்திருந்தார்.

இந்த நிலையில் கடற்றொழில் கூட்டுத்தாபனத் தலைவரின் கடமைகள் முகாமைத்துவ பணிப்பாளருக்கே வழங்கப்பட வேண்டுமென கடற்றொழில் அமைச்சு அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர், ஆனால் அப்படித் தலைவருக்கான கடமைகளைப் பொறுப்பேற்கக்கூடாது என்று அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ள முன்னாள் தலைவர், கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பொது முகாமையாளருக்கு அழுத்தம் கொடுக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தனது எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும், கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் தொடர்பில் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுவே இராஜாங்க அமைச்சர் தனது பொறுப்புகளில் இருந்து விலக தீர்மானித்ததற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பில் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவிடம் வினவிய போது, தான் தொடர்ந்தும் இராஜாங்க அமைச்சர் பதவியில் நீடிப்பார் என்றும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து மீனவர்களுக்காக தொடர்ந்து பணியாற்றுவார் என்றும் தனிப்பட்ட மற்றும் தொழில்சார்ந்த காரணங்கள் பலவற்றைக் கருத்திற்கொண்டு 4 நிறுவனங்களின் கடமைகளில் இருந்து விலகத் தீர்மானித்தார் என்றும் தெரிவித்தார்.

## ஹரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவர்கள் முன்னர் வகித்த அமைச்சுக்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு ஆலோசகர்களாகவே நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் நியமனங்கள் தேர்தல் விதி மீறல் என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டின. இது குறித்து தேர்தல் ஆணைக்குழுவிற்கும் முறைப்பாடு செய்திருந்தன. சர்ச்சைக்குரிய சூழ்நிலையை கருத்தில் கொண்டு, தேர்தல் பணிகளுக்காக இருவரும் தங்களின் சிறப்புரிமைகளை தவறாக பயன்படுத்துகிறார்களா என்பது குறித்து கண்காணித்து வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்த தேர்தல் ஆணைக்குழுத் தலைவர்

தொடர்ச்சி 8ம் பக்கம்....




காலைக்கதிர் Kalaikkathir

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் யாழ். மற்றும் திருமலையில் போராட்டம்




## 30 ஆம் திகதி அனைவரையும் திரள அழைப்பு

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினமான எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே போராட்டம் தொடர்பில் அறிவித்துள்ளனர்.

யுத்தம் நிறைவுக்கு வந்த நாள்கள் தொடக்கம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை தேடி போராடி வருகிறோம். இது வரையில் எமக்கான நீதி கிடைக்கப்பெறவில்லை.

உள்ளக விசாரணைகளின் ஊடாக நீதி கிடைக்கும் என நாங்கள் நம்பவில்லை. எனவே தான் நாம் சர்வதேச விசாரணைகளை கோரி போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

அந்த வகையில் எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கில் யாழ்ப்பாணத்திலும் கிழக்கில் திருகோணமலையிலும் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

எமது போராட்டத்திற்கு தமது அரசியல் நிலைப்பாடுகளை கடந்து கட்சி பேதங்கள் இன்றி அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும்.

அரசில் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சங்கங்கள் என அனைத்து தரப்பினரும் எமது போராட்டத்திற்கு வலுசேர்க்க தமது ஆதரவுகளை வழங்கி போராட்டத்தில் கலந்து கொண்டு எமது குரலை சர்வதேசத்திற்கு கேட்குமாறு கூற வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேட்டுக்கொண்டுள்ளன.

அதேவேளை, குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன், அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியன் மற்றும் அகில இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்க வடமாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா ஆகியோரும் குறித்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு போராட்டத்திற்கு தமது அமைப்புக்கள் சார்ந்த ஆதரவை தெரிவித்துள்ளனர். (05)

# 97 வயதில் முதுமாணி பட்டம்பெற்ற மூதாட்டி



இலங்கையில் 97 வயது மூதாட்டி ஒருவர் முதுமாணிப் பட்டம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற களனிப் பல்கலைக்கழகத்தின் 143ஆவது பட்டமளிப்பு விழாவில் லீலாவதி தர்மரத்ன என்ற மூதாட்டி பௌத்த கற்கைகளில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.



இளந்தலைமுறையினருக்கு முன்னுதாரணமாக திகழும் அவர் பட்டம் பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், 'கல்வி கற்பதற்கு வயது ஒரு தடையல்ல' எனத் தெரிவித்துள்ளார்.

லீலாவதி தர்மரத்ன இதற்கு முன்னர் ஆசிரியையாகவும் நோட்டரி அதி காரியா கவும் கடமையாற்றியுள்ளார். (05)

# மனைவியை அடைத்து வைத்து வீட்டுக்குத் தீ வைத்த கணவன்

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம் - அச்சுவேலி பகுதியில் குடும்ப பிரச்சினை காரணமாக பெண் ஒருவர் தீயிட்டு எரியூட்டப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

திருமணம் செய்து 10 வருடங்கள் கடந்த நிலையில் குடும்பத்தில் பிரச்சினை அடிக்கடி இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படும் நிலையில், கணவன் மது போதையில் வீட்டுக்கு வந்து மனைவியுடன் தகராறில் ஈடுபட்ட பின்னர் அறை ஒன்றுக்குள் பூட்டி வைத்து தீயினை மூட்டியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தாயான 28 வயதான பெண் எரிகாயங்களுக்கு உள்ளானவராவார்.

காயமடைந்த பெண் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் கணவன் தப்பி சென்றுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 4 கோடி ரூபா பெறுமதியான பொருள்களுடன் சகோதரர்கள் கைது





சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட நான்கு கோடி ரூபா பெறுமதியான பொருள்களுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இரண்டு சந்தேக நபர்கள் கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.



ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் வசிக்கும் 57 வயதுடைய சகோதரியும் 55 வயதுடைய சகோதரனுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் வெளிநாடுகளுக்குப் பொருட்களைக் கொண்டுசெல்லும் தொழிலில் ஈடுபட்டு வருவதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் திங்கட்கிழமை காலை 06.51 மணியளவில் இந்தியாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

பின்னர், சந்தேக நபர்கள் இருவரும் வர்த்தகர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள வழியினூடாக விமான நிலையத்தை விட்டு வெளியே செல்ல முயன்ற போது விமான நிலைய அதிகாரிகளால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது, இவர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து கார் உதிரிப் பாகங்கள், செயற்கைக் கோள் தொலைக்காட்சி உபகரணங்கள், மதுபான போத்தல்கள், 1,100 அறுவை சிகிச்சை கத்திகள், சிகரெட்டுகள், 2,220 இந்திய கோப்பி பொதிகள் மற்றும் 100 கிரீம் பெட்டிகள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05)

# பொல்லால் தாக்கி மனைவி கொலை

## கணவன் கைது

ஹபரணை, பலுகஸ்வெவ பகுதியில் மனைவியை பொல்லால் தாக்கி கொலை செய்த கணவன் கைது செய்யப்பட்டுள்ளார் என ஹபரணை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எப்பாவல பலுகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய மனைவியே கொலை செய்யப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, 66 வயதுடைய சந்தேக நபரான கணவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரணை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# எது பேசு பொருள்?

தேர்தல் பரப்புரைகள் சூடுபிடித்துள்ளன. வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுகின்றன. முதலில் தபால் மூல வாக்களிப்பே இடம்பெறும் என்பதால் அரச பணியாளர்களுக்கான சலுகைகளின் சத்தம் பலமாகக் கேட்கிறது. ஆட்சியில் உள்ளவர்களும் சரி, ஆட்சியைப்பிடிக்கஆசைப்படுபவர்களும்சரிஏட்டிக்குப் போட்டியாகச் சலுகைகளை அறிவிக்கிறார்கள். அவை பொருளாதார நெருக்கடியில் உள்ள நாடு ஒன்றின்தலைவர்களால்வழங்கப்படும்வாக்குறுதிகள் போன்று தெரியவில்லை.

அரச பணியாளர்களின் அடிப்படைச் சம்பளம் உயர்த்தப்படும், அவர்களின் வாழ்க்கைச் செலவுப் படி உயர்த்தப்படும் என்கிற சலுகைகள் அரசுத் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவாலும் எதிர்க் கட்சித் தலைவரான சஜித் பிரேமதாசவாலும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அநுர குமாரவாலும் வழங்கப்படுகின்றன.

நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்காக கடன் பெறுவதைத் தவிர வேறு வழிகள் எவையும் இன்றித் திணறி வரும் நிலையில் அரச செலவீனத்தை மேலும் மேலும் அதிகரிக்கும் வகையிலான இந்த வாக்குறுதிகள் நல்ல அறிகுறிகளாத் தெரியவில்லை. பொருளாதார நெருக்கடிகாலத்திற்குமுன்னர்அரசியல்வாதிகளால் வழங்கப்பட்ட இதுபோன்ற தேர்தல் வாக்குறுதிகளில் இருந்து இப்போது வழங்கப்படும் வாக்குறுதிகள் பெரிதும் வித்தியாசத்திற்குரியன அல்ல. ஆக மொத்தத்தில் தேர்தல் வெற்றிக்காக தேசத்தை அடகுவைக்கும் தமது பண்பியல்பில் இருந்து அரசியல்வாதிகள் மாறவில்லை என்பது மட்டும் திண்ணம்.

நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கான திட்டம் குறித்து இவர்களில் யாரும் பேசவில்லை என்பது கவலைக்குரியது. பன்னாட்டு நாணய நிதியத்தின் கடன் நிபந்தனைகளை அப்படியே பின்பற்றுவதா அதில் மாற்றங்களை ஏற்படுத்தி வரியைக் குறைப்பதா என்பதே இவர்களின் விவாதப் பொருளாக இருக்கின்றது. நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய வங்கி ஆகியவற்றின் தற்போதைய கடன்கள் இலங்கைப் பொருளாதாரம் சமநிலைக்குத் திரும்புவதற்கான உதவிகளே தவிர, அவை வளர்ச்சிக்கான ஊக்க சக்தி இல்லை. பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தத் தீர்க்கமான திட்டங்களும் அதற்கான வழி வரைபடங்களும் தேவை. ஆனால் அவை பற்றிய கலந்துரையாடல்களாக இந்தத் தேர்தல் களம் கட்டமைக்கப்படவில்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வும் இந்தத் தேர்தல் களத்தின் பேசு பொருளாக இல்லை. அதேநேரம் பொருளாதாரத் தீர்வுகளும் அதன் பேசுபொருளாக இல்லை. மக்களுக்கான நிவாரணம் மட்டுமே மிகை ஒலி எழுப்பும் கருப் பொருளாக இதுவரை இருந்து வருகின்றது. இது இலங்கைக்கு நன்மையளிக்கும் போக்காகத் தென்படவில்லை. இனப் பிரச்சினையும் பொருளாதாரப் பிரச்சினையும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கக்கூடியவை. இரண்டுக்குமான தீர்வு சமகாலத்தில் காணப்படும்போதே இலங்கையில் நிரந்தர அமைதியும் நிலையான பொருளாதார வளர்ச்சியும் சாத்தியமாகும். ஆனால் இந்த அரசுத் தலைவர் தேர்தலின் மையக் கருப் பொருளாக இவை இரண்டுமே இல்லாதிருப்பது இலங்கையின் அழிவுக்கான பாதையையே திறந்துவிடும்.




# குரங்கு அம்மை; புதிய அச்சுறுத்தல்!

**கு.கணேசன்**

ஆப்பிரிக்காவில் தற்போது வேகமாகப் பரவிவரும் ‘குரங்கு அம்மை’ (Monkey pox) எனும் வைரஸ் தொற்றுப் பரவலை, உலக அளவில் கவலை அளிக்கக்கூடிய பொதுச் சுகாதார அவசர நிலையாக உலகச் சுகாதார நிறுவனம் அறிவித்ததை ஒட்டி, உலக நாடுகள் பலவும் மீண்டும் கொரோனா தொற்று பரவியதுபோல் பீதியில் உறைந்து கிடக்கின்றன.

ஆப்பிரிக்க நாடுகளில் 2023 ஜனவரியிலிருந்து இது பரவிவருகிறது. இதுவரை 27,000 பேருக்குத் தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 1,100 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டு ஜனவரி முதல் காங்கோ நாட்டில் மட்டும் 13,700 பேருக்குத் தொற்று பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. 4,50 பேர் உயிரிழந்துள்ளனர். இப்போது இந்தத் தொற்று பாகிஸ்தான் மற்றும் சுவீடன் நாடுகளுக்கும்



பரவிவிட்டது. வழக்கமாக இது பரவுகிற மத்திய ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு, கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளைத் தவிர்த்துவிட்டு, இதுவரை பரவாத நாடுகளிலும் இது பரவிவருவதுதான் இந்தப் பீதிக்கு முக்கிய காரணம்.

குரங்கு அம்மை புதிய நோயல்ல. உலகில் இப்படி ஒரு நோய் இருப்பது முதன் முதலில் 1958இல் டானிஸ் ஆய்வகத்தில் இருந்த குரங்குகளிடத்தில் அறியப்பட்டது. அதனால்தான் இதற்கு இந்தப் பெயர் வந்தது. 9 வயது பையன்தான் இதற்கு முதல் நோயாளி. 1970இல் ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ நாட்டில் இந்த நோயாளி காணப்பட்டார். 2003இல் அமெரிக்காவில் இது பெரிதாகப் பரவியதை வரலாறு பதிவுசெய்துள்ளது.

ஆப்பிரிக்காவைத் தவிர்த்து மற்ற நாடுகளில் இது பரவத் தொடங்கியது அப்போதுதான். என்றாலும்கூட 81 பேருக்கு மட்டுமே இந்த நோய் அப்போது அங்கே பரவியது; இறப்பு எதுவும் இல்லை. இதைத் தொடர்ந்து, 2017இல் நைஜீரியாவில் 172 பேருக்குப் பரவியதுதான் உலகளாவிய பரவலில் இது உச்சம் தொட்டது. 2022க்குப் பிறகு இது 116 நாடுகளில் பரவியுள்ளது. ஏறத்தாழ 99,000 பேரைப் பாதித்துள்ளது. இதுதான் அநேகரையும் அச்சுறுத்துகிறது.

சமீபத்தில் பாகிஸ்தானின் வடக்கு கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் மூன்று பேருக்கு இந்தத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்கள் மூவரும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுவிட்டு பாகிஸ்தான் திரும்பியவர்கள். ஆப்பிரிக்காவிலிருந்து சுவீடன் நாட்டுக்குத் திரும்பிய ஒருவருக்கு இந்தத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இலங்கையில் இதுவரை இந்த நோய் தடம் பதிக்கவில்லை என்பது நமக்கெல்லாம் ஓர் ஆறுதல். என்றாலும், பொதுச் சமூகத்தில் சரியான விழிப்புணர்வும் தடுப்பு ஏற்பாடுகளும் முன்னிறுத்தப்பட்டால், குரங்கு அம்மையின் பிடியிலிருந்து தப்பிப்பதும் எளிது.

### அரிய வகை அம்மை

‘குரங்கு அம்மை’ என்பது மிக அரிய வகை வைரஸ் நோய். இது பெரியம்மையை (Smallpox) ஒத்துப்போகும் நோய். இதைத் தோற்றுவிக்கும் வைரஸுக்குக் ‘குரங்கு அம்மை வைரஸ்’ (Monkeypox virus) என்று பெயர். இந்த வைரஸ் விலங்கினங்களில் காணப்படுவதுதான் வழக்கம். மாறாக, இப்போது இது மனிதர்களுக்கும் பரவுகிறது. உலகச் சுகாதார நிறுவனம் இதைக் ‘குரங்கு அம்மை வைரஸ்’ என்று சொல்வது தவறு என்கிறது; ‘எம்பாக்ஸ்’ வைரஸ் (mpox virus - MPXV) என்றே அழைக்கச் சொல்கிறது.

இந்தக் கிருமியில் ‘கிளாட் ஒன்’ (Clade I), ‘கிளாட் டூ’ (Clade II) என இரண்டு வகை உண்டு. ‘கிளாட் ஒன்’ வகை பாலுறவின் மூலம் பரவக்கூடியது; அதிக ஆபத்தானது. ‘கிளாட் டூ’ வகைத் தொற்று அதிக ஆபத்து இல்லாதது; நோயாளியுடன் நேரடி தொடர்புகொள்கிறவர்களுக்கு மட்டும் பரவக்கூடியது.

இப்போது உலக நாடுகளில் பரவும் வகை ‘கிளாட் ஒன்’ வகையில் மரபணுப்பிறழ்வுஏற்பட்ட ‘கிளாட் ஒன்பி’ (Clade 1b) எனும் துணை வகை. இது பாலுறவு மூலம் மட்டுமல்லாமல், நேரடி தொடர்பு மூலமும் பரவுகிறது. மேலும், இது வேகமாகப் பரவக்கூடியது; அதிக ஆபத்து உள்ளதாகவும் அறியப்பட்டுள்ளது. ஆகவேதான், உலகச் சுகாதார நிறுவனம் இந்த நோயை இரண்டாம் முறையாகப் பொதுச் சுகாதார அவசர நிலையாக அறிவித்துள்ளது.

### அறிகுறிகள் என்னென்ன?

குரங்கு அம்மையால் ஒருவர் பாதிக்கப்பட்டால், அவரது உடலுக்குள் தொற்று புகுந்த 5லிருந்து 21 நாட்களுக்குள் அறிகுறிகள் தெரியத் தொடங்கும். குளிர்காய்ச்சல், தலைவலி, தசைவலி, தொண்டை வலி, உடல்வலி, முதுகுவலி போன்றவை தொல்லை தரும். உடற்சோர்வு கடுமையாகும். இந்த அறிகுறிகள் தொடங்கிய 5 நாட்களில் உடல் முழுவதிலும் சிவப்பு நிறப் புள்ளிகளும் தடிப்புகளும் தோன்றும். அவற்றில் தாங்க முடியாத அளவுக்கு அரிப்பு உண்டாகும். பிறகு அவை கொப்புளங்களாக மாறும். அவற்றில் நீர்கோக்கும். உடலில் பல இடங்களில் நெறிக்கட்டிகள் தோன்றும்.

பொதுவாக, இந்தத் தொற்று 2லிருந்து 4 வாரங்கள் வரை நீடிக்கும். அதன் பிறகு கொப்புளங்கள் காய்ந்து பொருக்குகள் உருவாகி உதிர்ந்துவிடும். தானாகவே நோய் குணமாகிவிடும். மிக அரிதாகவே ஆபத்து நெருங்கும். நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்களுக்கு நோய் பல வாரங்கள் நீடிக்கும். குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகளுக்கும் இது பரவினால் உயிர் ஆபத்து அதிகம்.

### பரவுவது எப்படி?

குரங்கு அம்மைத் தொற்றால் பாதிக்கப்பட்ட ஒரு விலங்கிடமிருந்து மற்றொரு விலங்குக்குப் பரவுவதுதான் வழக்கம். முக்கியமாக, அணில்கள், எலிகள், முள்ளம்பன்றி போன்ற கொறித்து உண்ணும் பழக்கம் உள்ள விலங்கினங்களிலிருந்து மற்ற விலங்குகளுக்கு இந்த அம்மை நோய் பரவுகிறது. தொற்றுள்ள விலங்குகளோடு நெருங்கியத் தொடர்புகொள்ளும் மனிதர்களுக்கும் இது பரவுகிறது. குறிப்பாக, விலங்குக் கடிகள் மூலம் மனிதருக்குப் பரவுகிறது. விலங்கின இறைச்சிகளைச் சரியாக வேகவைக்காமல் சாப்பிட்டாலும் இது பரவக்கூடும்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# மாரவில கடலில் மூழ்கிய இளைஞனை காணோம்

புத்தளம், மாரவில கடலில் மூழ்கி இளைஞன் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை காணாமல் போயுள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தவத்தை வெலிபன்னகஹமுல பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞன் ஒருவரே காணாமல் போயுள்ளார்.

இந்த இளைஞன் மேலும் சிலருடன் இணைந்து மாரவில கடலில் நீராடிய நிலையில் திடீரென நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல்போன இளைஞனைத் தேடும் பணியில் மாரவில பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.(05)

# குரங்கு அம்மை; புதிய அச்சுறுத்தல்!

4ம் பக்க தொடர்ச்சி..........

நோய்த்தொற்று உள்ளவர்களுடன் நெருக்கமாகப் பழகும்போதும், சருமத்துடன் சருமம் உரசும்போதும் இது அடுத்தவர்களுக்கு எளிதாகப் பரவிவிடுகிறது. நோயாளி இருமும்போதும், தும்மும்போதும் காறித் துப்பும்போதும் எச்சில் மற்றும் சளி மூலம் மற்றவர்களுக்கு இந்தத் தொற்று பரவுகிறது. நோயாளி பயன்படுத்திய ஆடை, துண்டு, போர்வை போன்றவற்றின் வழியாகவும் இது பரவக்கூடும். வியர்வை, கொப்புளநீர், கண்ணீர் போன்ற அவரது உடல் திரவங்கள் மூலமும் காய்ந்த பொருக்குகள் மூலமும் இது அடுத்தவர்களுக்குப் பரவலாம். பாலுறவு மூலமும் இது பரவுவதாகச் சமீபத்தில் அறியப்பட்டுள்ளது.

### என்ன பரிசோதனை உள்ளது?

பயனாளியின் சளி, ரத்தம், கொப்புளம் நீர் போன்றவற்றின் மாதிரிகள் எடுத்து 'ஆர்.டி.பி.சி.ஆர்' (R.T.P.C.R.) பரிசோதனை செய்து இந்த நோயை உறுதிசெய்ய முடியும்.

### சிகிச்சை என்ன?

குரங்கு அம்மைக்கென தனிப்பட்ட சிகிச்சை எதுவும் இல்லை என்பதே அநேக உலக நாடுகளின் நிலைப்பாடு. இந்த நோயாளிகளுக்கு அறிகுறிகளைக் குறைக்கும் மாத்திரைகள் மற்றும் ஊசிகள் வழங்கப்படுவதும், அம்மைக் கொப்புளங்களில் பாக்டீரியா தொற்று ஏற்படாமல் பார்த்துக்கொள்வதும், ஊட்ட உணவுகள் மற்றும் திரவ உணவுகள் தாராளமாக வழங்கப்படுவதும் இப்போதுள்ள முக்கிய சிகிச்சைகள். ஐரோப்பாவில் மட்டும் குரங்கு அம்மைக்கு 'டெக்கோவிரிமெட்' (Tecovirimat) எனும் மருந்து பயன்பாட்டில் உள்ளது.

### தடுப்பூசி உண்டா?

பாதிக்கப்பட்டவரையும் அவரோடு தொடர்பு கொண்டவர்களையும் 3 வாரங்களுக்குத் தனிமைப்படுத்தி உயர் சிகிச்சை அளிப்பது நோய் பரவுவதைத் தடுக்கும் வழிகளில் ஒன்று.

அதோடு பெரியம்மைக்குச் செலுத்தப்படும் தடுப்பூசியை இந்த அம்மைக்கும் பயன்படுத்தினால் 85% பயன் கிடைக்கிறது. 1980இல் பெரியம்மை நோய் ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பிறகு பெரியம்மைத் தடுப்பூசி செலுத்தப்படுவது உலக அளவில் நிறுத்தப்பட்டது. ஆகவே, 44 வயதுக்கும் குறைவாக உள்ளவர்களுக்கு இது பரவும் வாய்ப்பு அதிகம். அவர்களுக்கு இந்தத் தடுப்பூசியைச் செலுத்த முன்னுரிமை தரப்படுகிறது.

அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் 'எம்விஏ-பிஎன்' (MVA-BN), 'எல்சி 16' (LC 16), 'ஆர்தோபாக்ஸ் வேக்' (Orthopox Vac) எனும் தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றில் ஒன்றை 4 வார இடைவெளியில் இரண்டு தவணைகளில் செலுத்திக்கொள்ள வேண்டும். அம்மை நோயாளியைத் தொடர்புகொள்வதற்கு முன்போ, தொடர்புகொண்ட முதல் நான்கு நாட்களுக்குள்ளாகவோ இந்தத் தடுப்பூசியைச் செலுத்திக்கொண்டால், குரங்கு அம்மை வருவது தடுக்கப்படுகிறது. ஆனாலும், இது எல்லோருக்கும் பரிந்துரைக்கப்படுவதில்லை. ஆபத்து அதிகம் உள்ளவர்களுக்கு மட்டுமே இது பரிந்துரைக்கப்படுகிறது. இலங்கை உட்பட பல நாடுகளில் இன்னும் இது மக்கள் பயன்பாட்டுக்கு வரவில்லை. இனிமேல் இது வரக்கூடும்.

# முறைமை மாற்றத்தை உருவாக்கியவர் சஜித்

## இம்ரான் எம்.பி.புகழாரம்

(கே எ ஹமீட்)

முறைமை மாற்றத்தைச் செய்து காட்டியவர் சஜித் பிரேமதாஸ என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ பங்கு கொண்ட கந்தளாய் பிரதேசத்தில் இடம்பெற்ற பிரச்சார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

இன்று எல்லாரும் கேட்கும் விடயம் 'சிஸ்டம் சேன்ஞ்' (முறைமை மாற்றம்). இவர்கள் மேடைகளில், போராட்டங்களில் 'சிஸ்டம் சேன்ஞ்' பற்றி பேசினாலும் தேர்தல் என்ற ஒன்று வரும் போது அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.



ஜனாதிபதி வேட்பாளர்களிலே முறைமை மாற்றத்தைச் செய்து காட்டியவர் சஜித் பிரேமதாஸ மட்டுமே. நாம் வரலாற்றில் பல எதிர்க்கட்சித் தலைவர்களை கண்டுள்ளோம். அவர்கள் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அரசாங்கத்தை விமர்ச்சிக்கவும் அரசாங்கத்தை கவிழ்க்க என்ன செய்யலாம் என யோசித்தே நாம் கண்டுள்ளோம்.

ஆனால் வரலாற்றில் முதன்முறையாக அந்த சிஸ்ட்டத்தை மாற்றியவர் எமது தலைவர் சஜித் பிரேமதாஸ மட்டுமே.

கொவிட் பிரச்சினையாக இருந்தாலும் சரி பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும் சரி அவர் விமர்சன அரசியலை விட்டுவிட்டு சேவை அரசியலை முன்னெடுத்தார். அந்த சிஸ்ட்டத்தை மாற்றினார்.

அவர் எதிர்க்கட்சி தலைவராக இருந்து பாடசாலைகளுக்கு உதவ முடியுமாக இருந்தால், வைத்தியசாலைகளுக்கு உதவ முடியுமாக இருந்தால் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் எவ்வாறான அபிவிருத்தியையும் 'சிஸ்டம் சேன்ஞ்' ஐயும் கொண்டு வர முடியும் என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiline Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நல்லூர் தீர்த்த திருவிழாவுக்கு யாழில் விடுமுறை அறிவிக்குக

## ஆளுநரிடம் பாபு சர்மா கோரிக்கை

இலங்கை நாட்டில் இலங்கை வாழ் மக்கள் மட்டுமல்ல உலக வாழ் இந்துக்களும் நல்லூர் திருவிழாவில் கலந்து தங்களது பக்திபூர்வமான வேண்டுதலை செய்துவருகின்றார்கள்.இந்நிலையில் 25 நாள்களாக விரதம் இருந்து நல்லூர் முருகனை மனம் உருகி வேண்டி நிற்கும் பக்தர்கள் செப்ரெம்பர் 2 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் தங்களது விரதத்தை பூர்த்தி செய்து கொள்வார்கள்.

இந்த விரத பூர்த்தி தினமான தீர்த்த தினத்தை யாழ் மாவட்டத்தினருக்கு, பாடசாலை உட்பட அரச ஊழியர்களுக்கு குறிப்பாக இந்துக்களுக்கு விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டும் என சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா மீன்பிடி மற்றும் கடற்தொழில்அமைச்சர்டக்ளஸ்தேவானந்தாவிடமும் வடமாகாண ஆளுநர் பி . எஸ் . எம். சாள்ஸிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை இந்த கோரிக்கையின் பிரதிகள் வடமாகாண தலைமைச் செயலாளர் எல் .இளங்கோவன் ,யாழ் கல்வி அமைச்சின் செயலாளர் எம் . பற்றிக் டிறஞ்சன், எம்.பிரதீபன் மாவட்ட செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது .

மேலும் நல்லூர் திருவிழாவானது இலங்கை நாட்டின் ஒரு தேசிய திருவிழாவாக சகல இன மக்களாலும் பக்திபூர்வமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந்த தீர்த்த திருவிழா அன்று புண்ணிய விரதத்தை பூர்த்தி செய்து கொள்வதற்காக அத்தினதை விடுமுறை தினமாக அறிவித்தால் இந்து மக்கள் நன்றி உடையவர்களாக இருப்பார்கள் எனவும் குறித்த கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(05)

# வளர்ப்பு நாய் கடிக்கு இலக்கான குடும்பப் பெண் பரிதாபச் சாவு

## யாழ். குடாநாட்டில் சம்பவம்

யாழில்குடும்பப்பெண்ணொருவர் வளர்ப்பு நாய் கடிக்கு உள்ளாகிய நிலையில் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

காரைக்காட்டு வீதி, வண்ணார் பண்ணை பகுதியைச் சேர்ந்த மகேந்திரம்சாந்தி(வயது62)என்பவரே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

உயிரிழந்த பெண்ணுக்கு கடந்த ஜூலை மாதம் 24 ஆம் திகதி வளர்ப்பு நாய் கையில் கடித்துள்ளது. இந்நிலையில் அவர் ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டார். சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

இந்நிலையில் அவருக்கு பக்றீரியா தொற்றுஏற்பட்டதன்காரணமாக, தோல் வியாதி ஏற்பட்டு திங்கட்கிழமை அதிகாலை காலை உயிரிழந்துள்ளார்.

அவரதுசடலம்மீதானமரணவிசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரிநமசிவாயம்பிறேம்குமார்மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(05)

# யாழில் கார் மோதி முதியவர் உயரிழப்பு

யாழில்கார்மோதிவிபத்துக்குள்ளாகிய முதியவர் ஒருவர் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

இதன்போது அரசடி வீதி, இருபாலை கிழக்கு, இருபாலை பகுதியைச்சேர்ந்த 69 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம்குறித்துமேலும்தெரியவருகையில்-

குறித்த நபர் யாழ். நகரில் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணியாற்றிவரும்நிலையில்கடந்த 25 ஆம் திகதி இரவுநேர கடமையை முடித்து விட்டு, காலை 8 மணியளவில் வீடு நோக்கி சென்றுகொண்டிருந்த போது விபத்திற்குள்ளாகியுள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்றுவந்த நிலையில், சிகிச்சைபலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின்பின்னர்சடலம்உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(05)

# ஆஸியில் அகதிகள் விடுதலைக்காக தொடர் சைக்கிள் ஓட்ட போராட்டம்




ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிட உரிமை வழங்கக் கோரி பதின்னான்கு வருடங்களாக காத்திருக்கும் அகதிகள் விடுதலைக்காக தொடர் சைக்கிள்ஓட்ட போராட்டம் நடைபெற்றுள்ளது.

இறுதிப் போர் 2009 ஆம் ஆண்டுகளின் பின்னர் தமது சொந்த மண்ணில் வாழ நிர்க்கதியற்று ஆஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்துள்ள தமிழ் அகதிகள் கடந்த 12-14 வருடங்களாக நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படாது தொடர்ந்தும் அந்நாட்டு அரசாங்கத்தால் தாம் வஞ்சிக்கப்படுவதாக கூறுகிறார்கள்.

இவர்களின் விடுதலைக்காக தொடர் சைக்கிள் ஓட்ட போராட்டம் நடைபெற்றுள்ளது. பிரிஸ்பேர்ன் மாநகரில் இருந்து கன்பரா நோக்கி 1400 கிலோ மீற்றர் தூரத்தை 18 நாள்களாக தினுஷன் சந்திரசேகரம் எனும் தமிழ் வாலிபன் சைக்கிளில் ஓடியுள்ளார்.

தமிழ் அகதிகள் தமது சொந்த நாட்டிற்கு மீளத்திரும்ப முடியாத உயிர்ப் பாதுகாப்பின்மை ஒருபுறம் புகலிடக்கோரிக்கைகள் மறுக்கப்பட்டு நிரந்தர வதிவிட உரிமையற்ற அங்கலாய்ப்பும்



தமது குடும்ப உறுப்பினர்களோடு சேர்ந்து வாழ முடியாத கையறு நிலையுமாக தொடர்ச்சியான உளச்சிதைவுகளால் இவர்கள் துவண்டு போயிருக்கின்றார்கள்.

போராட்டமே வாழ்வாகிப் போன தாம் வேறுவழிகளன்றியே இந்த அமைதி வழியிலான போராட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும், தமக்கு நிரந்தர விசா வழங்கப்படும் வரையிலும் தாம் தமது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கூறுகின்றார்கள்.

எனவே இப்போராட்டம்வெற்றியளித்துதமக்குரியவாழ்வுரிமை கிடைப்பதற்காக ஆஸ்திரேலியா உள்ள அனைவரினதும் ஒத்துழைப்பினையும்வேண்டுவதோடுதமதுபோராட்டக்களத்திற்கு அனைவரையும்அணிதிரண்டுவந்துஉறுதுணையாகநிற்குமாறும் வேண்டுகோள் ஒன்றினையும் முன்வைக்கின்றார்கள்.

இவ்வருடமும் தொடர் சைக்கிள் ஓட்ட போராட்டம் மீண்டும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## ஹரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க, வேட்பாளராக இருந்தாலும், அரச நியமனங்களை வழங்குவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது என்று கூறுகிறார். ஆனால், மேற்கூறிய முன்னாள் அமைச்சர்கள் தமக்கான, வாகனங்கள் போன்ற சலுகை களைப் பயன்படுத்தி ஒரு வேட்பாளரை விளம்பரப்படுத்தினால், அது தேர்தல் சட்டத்தை மீறிய செயலாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஐ.நா. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை விட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஆணையரால் வெளியிடப்பட்ட புதிய அறிக்கையில் அடிப்படை சுதந்திரங்கள் சார்ந்து இலங்கை பல்வேறு புதிய அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2022 இல் தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியின் விளைவாக வறுமை மட்டம் இரு மடங்கினால் அதிகரித்துள்ளது.

நாட்டிலுள்ள மொத்தக் குடும்பங் களில் கால்பங்கு குடும்பங்கள் உணவுப்பாது காப்பின்மை நெருக்கடிக்கு முகங்கொடுத் திருப்பதாக ஐ.நா மதிப்பிட்டுள்ளது. ஊழல் மோசடிகள் மற்றும் முறையற்ற பொருளாதார நிர்வாகம் தொடர்பான பொறுப்புக்கூறலும், ஜனநாயக மறுசீரமைப்புக்களும் இன்னமும் பெருமளவுக்குப் பூர்த்திசெய்யப்படவில்லை எனவும் உயர்ஆணையரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமையை மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையிலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## அவசியமானால்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திடம் தற்போது மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வெற்றுக் கடவுச்சீட்டுகள் மட்-டுமே இருப்பதால் கடவுச்சீட்டுகளை வழங்குவதை கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது.

புதிய இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை அறிமுகப்படுத்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது, இதற்காக ஏலம் கோரப்பட்டு வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு அதற்கான கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் வைத்திருக்கும் வெற்று கடவுச்சீட்டுகளின் மட்டுப்படுத்தப்பட்ட கையிருப்பைக்கருத்தில்கொண்டு, மின்னணு கடவுச்சீட்டுகளுக்குக் கட்டளை வழங்கப்பட்ட அதே நிறுவனத்திடமிருந்து அதே உத்தரவின் ஒரு பகுதியாக 50,000 வழக்கமான கடவுச்சீட்டுகளை வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த கடவுச்சீட்டுக்கள் ஒக்டோபர் இறுதி அல்லது அதற்கு முன் கிடைக்கும். அதுவரையில் அத்தியாவசியம் என்றால் தவிர கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிப்பதைத் தவிருங்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை நாசினிகள் கைப்பற்றப்பட்டுள்ளது. அந்த வர்த்தக நிலைய உர்மையாளருக்கு எதிராக சாவகச்சேர் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஒன்றரை லட்சம் ரூபாய் தண்டம் விதித்து சாவகச்சேர் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து குறிப்பாக இந்தியா விலிருந்து களை நாசினிகள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றில் பல இலங்கையின் பயன்படுத்துவதற்கான அனுமதியற்றவை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுவோது மட்டுமல்லாமல் மண் வளமும் உடனடியாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. எனவே விவசாயிகள் இவ்வாறான சட்டவிரோத களை நாசினிகள் தொடர்பாக அவதானமாக இருக்கவேண்டும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சட்டவிரோதமானகளைநாசினிவியாபாரம் தொடர்பாக தகவல் அறிந்தால் விவசாய திணைக்களத்திற்குதகவல்வழங்கவேண்டும் எனவும் மாவட்ட விவசாய திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கன் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், சட்டவிரோத களை நாசினி வியாபாரத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை தொடரும் எனவும், மாவட்டம் முழுவதும் அதிரடி சோதனைகள் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## சட்டவிரோத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கி இருந்துள்ளனர்.

இருவரும் இரவு மது போதையில் வீட்டில் தூங்கியபோது வீட்டுக்குள் நுழைந்தவர்களினால் ஒருவர் வீட்டிற்குள் இருந்து இழுத்து வரப்பட்ட பின்னர் சுவிஸ் பிரஜைகொல்லப்பட்டனர்என்றுபொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தது.

விசாரணை நடத்திய கனகராஜன் குளம் பொலிஸார், கொலை செய்யப்பட்டவருடன் வீட்டில் தங்கியிருந்தவரையும் சுவிஸில் இருந்து அண்மையில் நாட்டிற்கு வருகை தந்து வவுனியா உக்கிளாங்குளத்தில் வசித்து வந்த மற்றொரு நபரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

வீட்டில் இருந்த சிசிடிவி கமரா உபகரணங் களை இரசாயன பகுப்பாய்வுக்காக அனுப்பி வைப்பதற்கும்நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# தரமான கல்வியை வழங்குதலில் மொழியின் பிரயோகம் அவசியம்

## பீடாதிபதி பேராசிரியர் முஸ்தபா.



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைப் பொறுத்த மட்டில் கணிஷமான அளவு சிங்கள மொழியை தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களும் ஊழியர்களும் உள்ளனர். இவ்வாறான சூழலில் தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குவது என்ற இலக்கை நாங்கள் எட்டுவது என்றால், எங்களிடமுள்ள சிங்கள அறிவை மேலும் வளப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

எனவே கிடைத்துள்ள சிறந்த சந்தர்ப்பத்தை நாங்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா தெரிவித்தார்.

தேசிய மொழி கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும் தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் மேம்பாட்டு நிலையமும் இணைந்து நடாத்தும், ஊழியர்களுக்கான இரண்டாம் மொழி சிங்கள, கற்கை நெறிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு, ஊழியர் மேம்பாட்டு நிலைய பணிப்பாளர் கலாநிதி எச்.எம். நிஜாம் தலைமையில் 2024.08.26 ஆம் திகதி தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து கற்கைநெறியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே பேராசிரியர் முஸ்தபா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊழியர் மேம்பாட்டு நிலையத்தின் திட்ட இணைப்பாளர் சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.எச். நபாரின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் முஸ்தபா –

மாணவர்களுக்கான தரமான கல்வியை வழங்க முயலும்போது அவர்கள் சார்ந்த மொழியின் ஊடாக குறித்த விடயம் அவர்களுக்கு சென்றடையுமாக இருந்தால் மிக இலகுவாக புரிந்துகொள்ளகூடிய வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்றும் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் இந்த கற்கை நெறிக்காக சுமார் இரண்டு மில்லியன் ரூபாக்கள் பணத்தை செலவிடுகின்றது. எனவே பல்கலைக்கழகத்தின் எதிர்பார்ப்பு நிறைவேற அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் கேட்டுக்கொண்டார்.

நிகழ்வில் தேசிய மொழி கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இணைப்பாளர் தேசகீர்த்தி தங்கராஜ் கல்யாணி, கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் அலுவலர் ஜெ. பாலரஞ்சனி ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகர் எம்.எம். றிபாவுடீன், தேசிய மொழி கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வளவாளர்கள் மற்றும் கற்கையை தொடரும் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)





# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 3 பேர் கைது

## பசறையில் சம்பவம்

பசறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொளும்புவத்தை தெல்கொல் ஓய பகுதியில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட மூவரை திங்கட்கிழமை பசறை ஆக்கரத்தன்ன விஷேட அதிரடிப்படையினர்கைதுசெய்துள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை ஆக்கரத்தன்ன விஷேட அதிரடிப் படை புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த பகுதிக்கு விரைந்து சுற்றிவளைத்து தேடுதலை மேற்கொண்ட போது மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த மூவரை கைது செய்துள்ளனர்.

கைதானவர்கள் தொளும்புவத்தை பகுதியைச் சேர்ந்த 65 , 46 , 44 வயதுடையவர்கள் ஆவர்.

மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்படும் சில உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர்களையும் மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட பொருள்களையும் விஷேட அதிரடிப் படையினரால் பசறைபொலிஸ்நிலையத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டுவரும்பசறைபொலிஸார் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட உள்ளதாக தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# களுவாஞ்சிக்குடி நீதிமன்றிற்கு வழக்கிற்காக அழைத்துவரப்பட்ட கைதி தப்பியோட்டம்

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி நீதிமன்ற வளாகத்தில் மலசலகூடத்திற்கு சென்ற தண்டனை பெற்றகைதிஒருவர்தப்பிஓடியசம்பவம்திங்கட்கிழமை பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு உட்பட பல இடங்களில் கொள்ளையிட்ட சம்பவங்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற தண்டனை வழங்கப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட கிளிநொச்சி இரணைமடு பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய கைதியை சம்பவதினமான களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்பாக சிறைக்காவலர்கள் அழைத்துச் சென்று அங்குள்ள கூண்டில் அடைத்து வைத்தனர்.

இந்த நிலையில் குறித்த கைதி திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் கூண்டில் இருந்து மலசலம்கழிப்பதற்காகசிறைக் காவலர்அழைத்துசென்று மலசலம் கழிப்பதற்கு விட்டுவிட்டு வெளியில் காவல் இருந்துள்ள நிலையில் கைதி மலசல கூட கூரையை கழற்றி அதனூடாக தப்பி ஓடியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரும் சிறைக்காவலர் களும் அவரை மீண்டும் கைதுசெய்வதற்கானநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

# தே.ம.சக்தி உறுப்பினர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

## ஐ.ம.சக்தி உறுப்பினர் கைது

மினுவாங்கொடைபகுதியில்தேசிய மக்கள்சக்தியின் உறுப்பினர் ஒருவரை வாளால் தாக்கி காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது–

சம்பவத்தன்று, சந்தேக நபர் காயமடைந்தவரது வீட்டிற்கு சென்று தகராறில் ஈடுபட்டுள்ள நிலையில் வீட்டிலிருந்தபூந்தொட்டிகளைஉடைத்து வாளால் தாக்கியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, காயமடைந்தவர் மினுவாங்கொடைவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளநிலையில்அவரதுஒரு கையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(05)

# மசாஜ் நிலையத்தினுள் விபசார விடுதி: முன்னாள் சிப்பாய் உட்பட இருவர் கைது

களுத்துறை, கட்டுகுருந்த பிரதேசத்தில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதியொன்றிலிருந்து ஓய்வு பெற்ற சிப்பாய் உட்பட இருவர் களுத்துறை பொலிஸ்குற்றப்புலனாய்வுபிரிவினரால் கடந்த 24 ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை, மக்கொன பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய ஓய்வு பெற்ற இராணுவ வீரரொருவரும் பரகஸ்தோட்டைபிரதேசத்தைச்சேர்ந்த 34வயதுடையபெண்ணொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து,கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களைகளுத்துறைநீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(05)

# குஷ் மற்றும் போதை மாத்திரைகளுடன் பேராதனையில் இளைஞன் கைது

கண்டி, பேராதனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் குஷ் போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில்சந்தேகநபர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கண்டி, பிலிமத்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 75 கிராம் குஷ் போதைப்பொருள் மற்றும் 140 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படும் கோடாவுடன் ஒருவர் கைது

மஹபாகே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் கோடாவுடன் சந்தேக நபரொருவர் மேல் மாகாணத்தின் வட பிராந்திய பொலிஸ்குற்றத்தடுப்புபிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்தின் வட பிராந்திய பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராகம பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாணத்தின் வட பிராந்திய பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் கைது

கொழும்பு,வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டுவில பிரதேசத்தில் பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் மேல் மாகாணத்தின் தெற்கு பொலிஸ் குற்றத் தடுப்புப்பிரிவினரால் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்தின் தெற்கு பொலிஸ் குற்றத் தடுப்புப்பிரிவினருக்குக்கிடைத்த தகவலின்பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, வெல்லம்பிட்டி பிரதேசத் தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞ ரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 02 தங்க வளையல்கள், 03 மேதிரங்கள் , 04 தங்க மாலைகள் மற்றும் 09 கையடக்கத் தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்,வெல்லம்பிட்டி, நவகமுவமற்றும்ஹங்வெல்ல ஆகியபிரதேசங்களில் வீடுகளைஉடைத்துபெறுமதியானபொருள்களைத் திருடியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பானமேலதிக விசாரணைகளை மேல் மாகாணத்தின் தெற்கு பொலிஸ் குற்றத் தடுப்புப்பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# அதிபரை உடனடியாக இடமாற்றக்கோரி மன்னார், வங்காலையில் போராட்டம்








மன்னார் வங்காலையிலுள்ள தேசியப் பாடசாலையின் அதிபரை உடனடியாக மாற்றக் கோரி திங்கட்கிழமை காலை பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து பாடசாலைக்கு முன் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள்எழுதியபதாகைகளைஏந்தியவாறு ஈடுபட்டனர்.

பிள்ளைகளின் கல்வியை பாழாக்காதே, ஒழுக்கம் இல்லாத உன்னால் எப்படி ஒழுக்க மான சமுதாயத்தை உருவாக்க முடியும்?.



ஒரு குடும்பத்திற்காக ஊரை அழிப்பதா? உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



மன்னார் வங்காலை புனித ஆனாள் தேசியப் பாடசாலை கடந்த பல வருடங்களாக கல்வியிலும், விளையாட்டு நிகழ்வுகளிலும், ஏனைய போட்டிகளிலும் சாதனை நிலை நாட்டி வந்த நிலையில் அண்மைக் காலங்களாக பாடசாலை சகல துறைகளிலும் கீழ் மட்டத்தை அடையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக குறித்த பாடசாலையின் கல்வி நடவடிக்கை பாதிக்கப் பட்டதோடு, மாணவர்களின் செயற்பாடுகள் சகல துறைகளிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள அதிபர் நிர்வாகத் திறன் அற்றவராக உள்ள நிலையில் உடனடியாக அவரை மாற்றி புதிய அதிபரை நியமிக்க கோரிக்கை விடுக்கப்பட்டது.

நீண்ட காலமாக உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்த போதும் இதுவரை குறித்த அதிபரை மாற்ற எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில் பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்ததாக போராட்டத் தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகைதந்த மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் உடனடியாக குறித்த விடயம் தொடர்பாக துரித நடவடிக் கைகளை மேற்கொள்வதாக தெரிவித்த நிலையில் போராட்டம் கை விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.08.2024இல் வெளியிடப்பெற்றது